செ.வெ.எண்: 564/2016 நாள்: 23.08.2016

# பத்திரிக்கை செய்தி

-------------------------

கன்னியாகுமரி மாவட்டத்தில் 2016-17 –ம் ஆண்டு தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின்கீழ் ஒரு ஹெக்டேரில் ரூ.5.00 இலட்சம் செலவில் சொந்த நிலத்தில் மீன்வளர்ப்பு குளங்கள் அமைப்பவர்களுக்கு அதிகபட்சமாக ஒரு ஹெக்டேருக்கு ரூ.2.00 இலட்சம் மற்றும் மீன்குஞ்சுகள் வாங்குவதற்கு ரூ.10,000/- ஆக மொத்தம் ரூ.2.10 இலட்சம் பின்னிலை மானியமாக (Back ended subsidy) அளிக்கப்படும். ஒரு ஹெக்டேரில் மீன்வளர்ப்பு குளங்கள் அமைக்க விரும்புவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றது.

மீன்வளர்ப்பு குளங்கள் புதியதாக அமைக்க பயனாளி சொந்த நிலம் அல்லது 10 வருட குத்தகைக்கு பெற்ற நிலம் வைத்திருக்க வேண்டும். விண்ணப்பங்கள் விவசாயிகளிடமிருந்து அதிகம் பெறப்படின், முன்னுரிமை அடிப்படையில், தகுதியின் அடிப்படையில் பயனாளிகள் தேர்வு செய்யப்படுவார்கள்.

விருப்பமுள்ளவர்கள் கீழ்க்கண்ட முகவரியில் செயல்படும் மீன்வளத்துறை அலுவலகத்தை அலுவலக வேலை நாட்களில் தொடர்பு கொண்டு உரிய விண்ணப்ப படிவம் பெற்று பூர்த்தி செய்து உரிய ஆவணங்களுடன் சமர்ப்பித்திட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகம்,**
**டிஸ்டிலரி ரோடு,**
**வடசேரி பேருந்து நிலையம் மேல்புறம்,**
**வடசேரி, நாகர்கோவில் - 629001.**
**தொலைபேசி எண். 04652-227460**

மாவட்ட ஆட்சித்தலைவர்,
கன்னியாகுமரி மாவட்டம்,
(இ) நாகர்கோவில்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.**